நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அம்சவல்லி |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | மல்லூர் |
| வட்டம் | : | மல்லூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW8 |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜூலை மாதம், 22–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 3.01 PM

1. நான் தற்போது மல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேட்டுர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு. பிரசாந்த் என்பவர் முதல் விசாரணை செய்த குற்ற எண்.98/2025, ச.பி. 281, 106(1) BNS வழக்கினை தொடர் விசாரணைக்காக

26.02.2025 ம் தேதி பெற்றுக்கொண்டேன்.

2. மேற்படி வழக்கில் முதல் விசாரணை, மாதிரி வரைபடம், பார்வை மகசர், சாட்சிகளின் வாக்குமூலத்தில் மாற்றம் எதுவும் இல்லை என்பதால் நான் தனியாக எதுவும் பதிவுசெய்யவில்லை. அன்றையதினமே விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 33 N 3308 அரசு பேருந்தை வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

3. அன்றையதினமே மாலை 17.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி செல்வம் என்பவரை கைதுசெய்து தக்க பிணையத்தில் அனுப்பிவைத்தேன். அன்றையதினம் வழக்கில் இறந்துபோன ராஜகோபால் என்பவரின் பிரேதத்தை கோவை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி உறவினர் வசம் ஒப்படைத்தேன்.

4. கடந்த 3.03.2025 ம் தேதி விபத்து வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு சான்றிதழ் பெற்று சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாகுமாரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். ( **TN 33 N 3308 அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. மேட்டூர் அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவுசெய்த மருத்துவர் விவேகானந்தன் மற்றும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் காத்தவராயன் , முதல் நிலைகாவலர் இளவரசி , இவ்வழக்கின் முதல் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.பிரசாந்த் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

6. 15.03.2025 ம் தேதி ராஜகோபால் இறப்பை பதிவுசெய்த கங்கா மருத்துவமனை மருத்துவர் யாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 23.09.2025 ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன ராஜகோபாலின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அறிக்கை வழங்கிய மருத்துவர் பாலவெங்கடபெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். (

**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. மேலும் இந்த வழக்கில் காயம்பட்ட ராஜகோபால் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும்போது அவரை அனுமதித்த மருத்துவர் விவேகானந்தன் என்பவரை விசாரித்து அவர் பதிவுசெய்த விபத்து பதிவேடு அறிக்கை மற்றும் அவர் கொடுத்த எழுத்துபூர்வமான தகவல் ஆகியவற்றை பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ( **விபத்து பதிவேடு அறிக்கை மற்றும் போலீஸ் இண்டிமேசன் அ.சா.ஆ.14 மற்றும் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து அன்றையதினமே 23.09.2025 ம் தேதி எதிரி செல்வம் மீது சட்டபிரிவு 281, 106(1) BNS ன் படி குற்ற இறுயறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய விசாரணையின் படி இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அஜீத்குமார், அங்கமுத்து, ஜெகதீஸ்வரன் ஆவார்கள். மேற்படி 3 சாட்சிகளையும் நான் விசாரித்தேன். மேற்படி நபர்கள் சம்பவத்தை நேரடியாக பார்த்தாகதான் கூறியுள்ளனர்.
2. என்னுடைய விசாரணையின் படி விபத்தில் இறந்துபோன நபருக்கு இரண்டு கால்களிலும் அடிப்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கையில் வயிற்றில் ஏற்பட்ட காயத்தினால்தான் இறந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
3. தவறுதலாக அளிக்கப்பட்ட புகாரின் பேரில் சரிவர விசாரிக்காமல் நிலைய உதவி ஆய்வாளர் ஒரு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பார்வை மகசர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் விசாரணை அறிக்கை தயார் செய்து என்னிடம் மேல்விசாரணைக்காக வைத்ததை நான் சரிவர விசாரிக்காமல் எதிரியின் மீது தவறுதலாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
4. ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 3.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**